10.07.2026

COS. No. 5/2024

**PW.1. – மகேந்திரா**

**3–ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1–ஆம் பிரதிவாதி நிறுவனத்தை எனக்கு எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் ஆறு ஆண்டுகளாக தெரியும். SKT Mills சார்பாக என்னிடம் யார் பஞ்சு வேண்டும் என்று கேட்டார்கள் என்றால், அய்யாசாமி (D3) முருகேசன், பழனிச்சாமி மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் கேட்டார்கள். 27.03.2022-ஆம் தேதி அவ்வாறு கேட்டார்கள். 1-ஆம் பிரதிவாதி நிர்வாகத்தில் பிரச்சனைகள் இருப்பது சம்பந்தமாக எனக்கு தெரியாது. நான் பார்க்கும்பொழுது அவ்வாறு பிரச்சனைகள் இல்லை. நான் கொடுத்த பஞ்சுக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் என்றால், 89 லட்சம் ரூபாய் கொடுத்துள்ளார்கள். அதை வங்கி பரிவர்த்தனை மூலமாகதான் எனக்கு கொடுத்துள்ளார்கள். தற்போது SKT Mills நிறுவனம் தொழில் செய்கிறார்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 3-ஆம் பிரதிவாதி 1-ஆம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்க ஸ்ரீவில்லிப்புத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால், 3-ஆம் பிரதிவாதி இந்த வழக்கில் பதிலுரையில் அவ்வாறு சொல்லியுள்ளதாக என் வழக்கறிஞர் சொல்லி தெரியும். GST ஐ குறிப்பிட்ட தேதிக்குள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

**மறு விசாரணை :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.07.10 15:02:12 +05'30'

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.